ISSN : 2456-821X அவையம் 2(2) 2018 P.NO. : 27-34

புதிய அவையம்

SACRED HEART RESEARCH PUBLICATIONS

# தொல்காப்பியரின் எழுத்தெண்ணிக்கை கோட்பாடும் பிற்கால யாப்பிலக்கண வளர்ச்சியும்

**முனைவர் தி.அ. இரமேஷ்**
உதவிப் பேராசிரியர்
தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத் துறை
தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி), திருப்பத்தூர்
வேலூர் மாவட்டம்.

**கட்டுரை பெறப்பட்டது : 12.10.2018** **ஏற்கப்பட்டது : 24.10.2018**

தமிழ் இலக்கண வரலாறு நீண்டதொரு பாரம்பரியத்தை உடையது. அதாவது தொல்காப்பியர் காலத்திற்கு முன்பிருந்தே இலக்கண இலக்கியங்கள் இருந்தமைக்கான சான்றுகளைத் தொல்காப்பியர் தான் எழுதிய தொல்காப்பியத்தில் பதிவு செய்துள்ளார். தமிழ் இலக்கணம் பல பிரிவுகளைக் கொண்டு வளர்ச்சி பெற்றிந்தாலும் அவை அனைத்தும் தொடர்ச்சியான வளர்ச்சி பெற்றுள்ளனவா என்றால் இல்லை என்பதே உண்மை. ஆனால், தமிழ் யாப்பிலக்கணம் தொல்காப்பியருக்கு முன்பிருந்து தற்காலம் வரை தொடர்ச்சியான வளர்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருப்பதை, யாப்பியல் சார்ந்து நடைபெற்றுள்ள ஆய்வுகளை உற்றுநோக்கும் பொழுது அறிந்துகொள்ள முடியும். அந்த வகையில் தொல்காப்பியர் கூறும் எழுத்தெண்ணிக்கை கோட்பாட்டை கொண்டு பிற்கால யாப்பிலக்கண ஆசிரியர்கள் நிகழ்த்தியுள்ள முயற்சிகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**தொல்காப்பியரின் எழுத்தெண்ணிக்கை கோட்பாடு**

*தொல்காப்பியர் சீர் மற்றும் அடிகளுக்கு எழுத்தெண்ணிக்கையை வரையறை செய்துள்ளார். அவை பற்றிச் சற்று விரிவாகக் காணலாம்.*

**சீர்களுக்கு எழுத்தெண்ணிக்கை**

*சீர்களில் ஐந்து எழுதுக்களுக்கு மிகுந்து வராது என்று கூறியுள்ளார். அதாவது,*

*சீர்நிலை தானே யைந்தெழுத்து இறவாது (தொல்.நூ.41) என்பார். ஆனால் வஞ்சிப்பாவிற்கு விதிவிலக்கு அளிக்கப்படுவதைப் பின்வரும் நூற்பாவால் அறியலாம்.*

*நேர்நிலை வஞ்சிக்கு ஆறும் ஆகும் (தொல்.நூ.42)*

*இவ்விடம் இளம்பூரணர் தொல்காப்பியர் கருத்துடன் ஒத்து நிற்க, பேராசிரியர் ஏழு எழுத்துக்களும் வஞ்சிப்பாவின் சீர்களில் வரும் என்பார். "இதனை எச்சவும்மை யென்பார். ஏழெழுத்தானும் வஞ்சியுரிச்சீர் வருமென்ப. ஆங்ஙனங் கொள்ளின் இரண்டு சீராற் பதினான் கெழுத் துளவாகியே செல்லும்" என்று தம் உரையில் குறிப்பிட்டுள்ளார்.*

*இப்பகுதிக்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர் சீர்களுக்கு எழுத்துச் சிறுமை, பெருமைகளைக் குறிப்பிடுகின்றார். சிறுமை ஓரெழுத்து முதலாம் என்றும் பெருமை ஆறெழுத்து வரை என்றும் கூறிய நச்சினார்க்கினியர் ஆறு எழுத்துக்களுக்கு மேல் இடம்பெறுவது கட்டளையடி ஆகாது என்பார். இங்கு பேராசிரியர் கருத்துடன் மாறுபட்டு நிற்பதைக் காணமுடிகிறது.*

**அடிகளுக்கு எழுத்தெண்ணிக்கை**

*தொல்காப்பியர் நான்கு சீர்களைக் கொண்டது அடியெனப்படும் என்றும் அடியில் தளையும் தொடையும் பயின்று வரும் என்றும் வரையறை செய்துள்ளார். அதனை,*

*நாற்சீர் கொண்டது அடியெனப் படுமே (தொல். நூ. 1293)*

*என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் இருசீர் மற்றும் முச்சீரானும் அடிகள் வரும் என்பதை,*

*வஞ்சி யடியே யிருசீர்த் தாகும் (தொல்.நூ.1306)*

*முச்சீ ரானும் வருமிட னுடைத்தே (தொல்.நூ.1308)*

*ஆகிய நூற்பாக்களில் சுட்டியுள்ளார்.*

எழுத்தெண்ணி அடிவகுக்கும் முறைமையில் நான்கு சீர் கொண்ட அடிகளுக்கே எழுதெண்ணிக்கையைக் கூறியுள்ளார். மேற்கூறப்பட்ட இருசீர், முச்சீர் பெயராட்சிகள் இங்கு குறளடி, சிந்தடி என்ற போதிலும் எழுத்தெண்ணிக்கை அடிகளின் பெயர்களாக வழங்கப்பட்டுள்ளன.

நாலெழுத் தாதி யாக வாறெழுத்து
ஏறிய நிலத்தே குறளடி யென்ப (தொல்.நூ.1297)
ஏழெழுத் தென்ப சிந்தடிக் களவே
ஈரெழுத் தேற்ற மவ்வழி யான (தொல்.நூ.1298)
பத்தெழுத் தென்ப நேரடிக் களவே
ஒத்த நாலெழுத் தேற்றலங் கடையே (தொல்.நூ.1299)
மூவைந் தெழுத்தே நெடிலடிக் களவே
ஈரெழுத்து மிகுதலு மியல்பென மொழிப (தொல்.நூ.1300)
மூவா றெழுத்தே கழிநெடிற் களவே
ஈரெழுத்து மிகுதலும் இயல்பென மொழிப (தொல்.நூ.1301)

மேற்கூறப்பட்ட ஐந்து நூற்பாக்களில் ஒவ்வொரு அடிகளுக்குமான எழுத்தெண்ணிக்கை தெளிவுபடக் கூறப்பட்டுள்ளன. குறளடி, சிந்தடி, நெடிலடி, கழிநெடிலடி ஆகிய அடிகளுக்கு முறையே மூன்று நிலங்களும் அளவடிக்கு ஐந்து நிலங்களும் கூறப்பட்டுள்ளன. இதன் மூலம் தொல்காப்பியர் நாற்சீர் கொண்ட அளவடியே சிறந்தது என்பதை நிறுவுகின்றார். ஏனெனில் அளவடிக்கு மட்டும் ஐந்து நிலங்களைக் கொடுத்திருப்பது அதன் முக்கியதுவத்தை வெளிப்படுத்துகிறது.

தொல்காப்பிய உரையாசிரியர்களில் இளம்பூரணர், பேராசிரியர் இருவரும் எழுத்துவகை அடி என்று கூற, நச்சினார்க்கினியர் கட்டளையடி என்று குறிப்பிட்டுள்ளார். இதன் மூலம் நச்சினார்க்கினியர் ‘கட்டளை’ என்னும் பிற்காலச் சொல்லாட்சியைப் பயன்படுத்தியுள்ளமை புலப்படுகிறது.

**எழுத்தெண்ணும் முறை**

அடிகளில் எழுத்தெண்ணிக்கையை எவ்வாறு கணக்கிட வேண்டும் என்பதைத் தொல்காப்பியர்,

உயிரில் யெழுத்தும் எண்ணப் படாஅ
உயிர்த்திறம் இயக்கம் இன்மை யான (தொல்.நூ. 42)

என்று வரையறை செய்துள்ளார். இங்கு உயிரில் எழுத்து என்பது மெய்யெழுத்து என்றுணர்க. இந்நூற்பாவில் ‘உயிரில்லெழுத்தும்’ என்றவிடத்து எச்சவும்மை இடம்பெற்றிருப்பதை அறிக. ஆதலால் மெய் மட்டும் அன்றி குற்றியலுகரம், குற்றியலிகரம் ஆகிய இரண்டும் கணக்கிடப்படாது என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும் என்பது ஆசிரியர் கருத்து. இதன் மூலம் எழுத்தெண்ணிக்கையில் உயிரும் உயிர்மெய்யும் மட்டுமே கணக்கிடப்படும். அதாவது ஒரு மாத்திரை அளவுக்கு மேல் உள்ள எழுத்துக்கள் கணக்கிடப்படும்.

இப்படித் தொல்காப்பியரின் எழுத்தெண்ணிக்கைக் கோட்பாடு காணப்படும் நிலையில், தொல்காப்பியத்தைத் தொடர்ந்து வளர்ச்சி பெற்றுள்ள யாப்பிலக்கண நூல்களை நோக்கும் பொழுது சில உண்மைகள் புலனாகின்றன. அதாவது, தொல்காப்பியரின் எழுத்தெண்ணிக்கை கோட்பாடு, பிற்கால யாப்பிலக்கண நூல்களில் கட்டளைப் பாக்கள் என்னும் அடிப்படையாக மாறியுள்ளதைக் காணமுடிகிறது.

தொல்காப்பியர் எழுத்துவகை அடிகளுக்கு வழங்கிய பெயர்கள் காக்கை பாடினியம் தொடங்கி பிற்கால யாப்பிலக்கண நூல்கள் அனைத்திலும் சீர்வகை அடிகளுக்கான பெயராட்சிகளாக மாறியுள்ளன. ஆனால் எழுத்தெண்ணிப் பாடும் அடி மற்றும் பா முறையே கட்டளை அடி கட்டளைப் பா என்று வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது. பிற்கால நூல்கள் அனைத்திலும் எழுத்துவகை அடி என்பதைக் காட்டிலும் கட்டளைப் பா என்னும் தன்மையிலேயே தொல்காப்பியரின் எழுத்தெண்ணிக்கை கோட்பாடு நீட்சி பெற்றுள்ளதைக் காணமுடிகிறது.

எழுத்தெண்ணிப் பாடப்படும் பாடல்கள் கட்டளைக் கலித்துறை, கலிநிலைத்துறை, கட்டளைக் கலிவிருத்தம், கட்டளை வெண்பா, கட்டளை ஆசிரியம், கட்டளைக் கலிப்பா, கட்டளை வஞ்சி, கட்டளைக் கலிவெண்பாட்டு, கட்டளைச் சிந்து எனப் பல நிலைகளில் காணப்படுகின்றன. இவற்றில் சிலவற்றிற்கே இலக்கணம் எழுதப்பட்டுள்ளன. பல பா வகைகளுக்கு இலக்கணம் உரைகளின் மூலமே இலக்கணம் உணர்த்தப்படுகிறது, அதாவது, கட்டளை வெண்பா, கட்டளை ஆசிரியம், கட்டளை வஞ்சி போன்றவைக்கு யாப்பருங்கல விருத்தியுரையில் இலக்கணம் பெறுவதைப் பின்வரும் மேற்கோள்களால் அறியலாம்.

ஒருசார் ஆசிரியர், ஈற்றடி ஒழித்து ஏனையடி எழுத்து ஒத்து வருவனவற்றைக் ‘கட்டளை வெண்பா’ என்றும் ஒவ்வாது வருவனவற்றைக் ‘கலம்பக வெண்பா’ என்றும், ஈற்றடி எழுத்தும் ஏனையடி எழுத்தும் ஒத்து வருவனவற்றைச் ‘சமநடை வெண்பா’ என்றும்……..(யா.வி.உரை.ப.530)

*எல்லா அடிகளும் எழுத்து ஒத்து வரும் கலிகளைக் கட்டளைக்கலி என்றும், ஒவ்வாது வருவனவற்றைக் கலம்பகக்கலி என்றும் வழங்குவர். இவ்வாறே கட்டளை ஆசிரியம், கலம்பக ஆசிரியம் என்றும்; கட்டளை வஞ்சி, கலம்பக வஞ்சி என்றும் வழங்கப்படும் (யா.வி.உரை.ப.535)*

*ஆனால், மேற்கூறப்பட்ட கட்டளைப் பாக்களில் பெருவழக்கு பெற்றது கட்டளைக் கலித்துறை ஒன்றே. அதைத் தொடர்ந்து கட்டளைக் கலிப்பாவும் கட்டளைக் கலிவிருத்தமும் வழக்குப் பெற்றுள்ளன. மற்றவை இலக்கிய வளம் பெறாமல் இலக்கண உரைகள் வழியே சான்றுகளாக மட்டுமே காணமுடிகிறது.*

**கட்டளைக் கலித்துறை**

*கட்டளைக் கலித்துறைக்கு முதன்முதலில வீரசோழியம் இலக்கணம் கூறியுள்ளது. இதைத் தொடர்ந்தே பிற ஐந்திலக்கண நூல்கள் இலக்கணம் வகுத்துள்ளன. ஆனால் கட்டளைக் கலித்துறை என்ற பெயராட்சி இன்றி கோவைக் கலித்துறை, திலதக் கலித்துறை என்னும் பெயர்களில் வீரசோழியம் இலக்கணம் வரைந்துள்ளது.*

*மேலும் காக்கை பாடினியம், யாப்பருங்கலம், காரிகை, யாப்பொலி, அறுவகை இலக்கணம், ஏழாம் இலக்கணம், யாப்பு நூல், கட்டளைக் கலித்துறை ஆகிய நூல்களில் கட்டளைக் கலித்துறைக்கான இலக்கணம் பேசப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது. இந்நூல்கள் அனைத்தும் கட்டளைக் கலித்துறைக்கான எழுத்தெண்ணிக்கையை நேர் 16 நிரை 17 என்னும் தன்மையில் வகுத்துள்ளன. அதாவது,*

*நெடிலடி நான்கவை நேர்ந்துநின் றேபதி னாறெழுத்தாய்*
*முடிவன வாம்பதி னேழு நிரைவரின் முன்மொழிந்த*
*படிவழு வாது நடைபெறு மோசைவண் டேந்திநின்ற*
*கடிகமழ் கோதைக் கயனெடுங் கண்ணி! கலித்துறையே!* *(வீரசோ. கா.122)*

*அடிதொறும் மெய்யொற் றன்றி எண்ணின்*
*நிரைமுத லாயின் பதினே ழெழுத்தும்*
*நேர்முத லாயின் பதினா றெழுத்தும்*
*அமைதல் அளவாம்; வினைத்தொகை போன்றே.* *(யாப்பு.நூ.127)*

*அடிதொறும் வெண்டளை யாய்விளங் காய்முடி வாய் நடுவே*

*நெடிலிறுங் காய்விள நேரா தடுத்து நெடிலிடைக்காய்*

*நடைபெற லற்றநன் னேர்பதி னாறு நலிலெழுத்தாய்க்*

*கடையுறு மோனைமற் றேயோர் விகற்பக் கலித்துறை (கட்டளைக்கலி. நூ.1)*

*என்பதாக வரையறை செய்துள்ளன. இவ்வெண்ணிகை தொல்காப்பியர் கூறிய நெடிலடிக்கான 15, 16, 17 ஆகிய நிலங்களில் பின் இரண்டு நிலங்கள் பொருந்துவதை அறிக.*

*19 ஆம் நூற்றாண்டில் கட்டளைக் கலித்துறை என்னும் பெயரில் சி.வை. தாமோதரம்பிள்ளை கட்டளைக் கலித்துறைக்கான இலக்கணத்தை மட்டும், வீரசோழியத்தைப் பின்பற்றி தனி நூலாக எழுதியுள்ளார். இந்நூல் கட்டளைக் கலித்துறைக்கு மோனை விதியைச் சிறப்பிலக்கணமாகக் கூறியுள்ளது. மேலும் கட்டளைக் கலித்துறையின் வகைப்பாடுகள் பற்றியும் விளக்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.*

***கட்டளைக் கலிப்பா***

*கட்டளைக் கலிப்பாவிற்கு முதன் முதலில் யாப்பருங்கல விருத்தியுரையில் ஒரு மேற்கோள் நூற்பாவை எடுத்துக்காட்டி இலக்கணம் கூறப்பட்டுள்ளது. அதாவது,*

*மாச்சீர் முன்வரு நாற்சீ ரடியே*

*நேர்முதல் நிரைமுதல் நிரனிறை யானே*

*பதினோ ரெழுத்தும் பன்னீ ரெழுத்தும்*

*இயைந்தரை யடியாய் நடந்தஃ திரட்டித்*

*தொத்து நான் கிறுவது கட்டளைக் கலிப்பா (யா.வி. மேற்.)*

*மாச்சீர் முதலாகக் கொண்டு நான்குசீர் அரையடி, எண்சீர் கொண்ட முழு அடியாய் அமையும். அரையடிக்கு நேர்முதலாயின் 11 எழுத்தும் நிரைமுதலாயின் 12 எழுத்தும் பெற்று வரும் எனக் குறிப்பிட்டுள்ளது. 'மாச்சீர் கலியுட்புகா' என்ற இலக்கணம் இதற்கு விலக்கு என உரையில் எடுத்துக்காட்டியுள்ளது. (தொல். நச்சர். நூ.130 உரை) கட்டளைக் கலிப்பாவிற்கு நேர் 11 நிரை 12 என்னும் எழுத்தெண்ணிக்கை கூறப்பட்டுள்ளது. இதைப் பின்பற்றியே பிற்கால யாப்பிலக்கண நூல்கள் அனைத்தும் கட்டளைக் கலிப்பாவிற்கு இலக்கணம் எழுதியுள்ளன.*

***கட்டளைக் கலிவிருத்தம்***

*கட்டளைக் கலிவிருத்தத்திற்கு எழுத்தெண்ணிகையை 20 ஆம் நூற்றாண்டில் தி. வீரபத்திர முதலியார் எழுதிய விருத்தப்பாவியல் என்னும் நூல்தான் முதன் முதலில் வரையறை செய்து இலக்கணம் கூறியுள்ளது. அதாவது, நேர் 11 நிரை 12 என்பது மரபு. சில இடங்களில் நேர் 12 நிரை 13 என்ற எண்ணிக்கையும் பொருந்தும் என்பதாம்.*

காத லிக்குங்க லிவிருத் தத்தொரு

பாத மாவருங் கூவிளம் பற்றிடி

னாத யானிரை நேர்க் கெழுத் தாறிரண்

டோதி னாரொரு பஃதுட னொன்றரோ (வி.பா.1)

மாச்சீருடன் கூவிளம் சீர் புணரும் போது ஒருவித கலிவிருத்தம் தோன்றும். அதில் நேர் 11 நிரை 12 என்னும் எழுத்தெண்ணிக்கை பயின்று வரும் என்பது மேற்காணும் நூற்பா தரும் விளக்கமாகும். இதில் மாறுபட்டு நிற்பதும் விதிவிலக்கு

மேலும் சிற்றிலக்கியங்களில் நேர் 14 நிரை 15 என்ற எண்ணிக்கையிலும் எழுத்துக்களை அமைத்து பாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது. த. சரவணத்தமிழன் 20 ஆம் நூற்றாண்டில் எழுதிய யாப்பு நூல் பலவகையான கட்டளைப் பாக்களை அறிமுகப்படுத்தியுள்ளது. அவை அனைத்தும் எழுத்தெண்ணிக்கையில் அடிதொறும் ஒத்துக் காணப்படும் தன்மையில் அமைந்துள்ளன. குறிப்பாக சிந்து, கும்பி போன்றவை எழுத்தொத்து வந்தமையால் அவற்றை கட்டளைச் சிந்து, கட்டளை கும்பி என்பார்.

**மதிப்புரை**

தொல்காப்பியர் வகுத்த எழுத்தெண்ணிகை பிற்காலத்தில் சில வரையறைகளுக்கு உட்பட்டு சிறந்த முறையில் பயன்படுத்தப்பட்டுள்ளதை அறியமுடிகிறது. நேரடிக்கான எழுத்தெண்ணிக்கையில் 11,12,13,14 எழுத்துக்களும் நெடிலடி எழுத்தெண்ணிக்கையில் 15,16,17 எழுத்துக்களும் தொடர்ந்து காணப்படுவதைத் தெரிந்துகொள்ள முடிகிறது. மேலும் தொல்காப்பியரின் இவ்வெழுத்தெண்ணிக்கை முறைகளைத் தமிழ் இலக்கிய பரப்பில் ஒப்பிட்டு ஆராயும் பொழுது தொல்காப்பியரின் எழுத்தெண்ணிக்கை கோட்பாடு காலந்தோறும் தொடர்ந்துள்ளதா என்பதை அறிய துணைநிற்கும்.

**துணை நூற்பட்டியல்**


- ✓ தொல்காப்பியம் - பொருளதிகாரம் (இளம்பூரணர் உரை, நச்சினார்க்கினியர் உரை, பேராசிரியர் உரை), தமிழ் மண் பதிப்பகம், சென்னை, 2003.
- ✓ யாப்பருங்கல விருத்தியுரை, அமிதசாகரர், கழக வெளியீடு, சென்னை, 1973.
- ✓ யாப்பு நூல், த. சரவணத்தமிழன், தமிழன் பதிப்பகம், திருவாரூர், 1995.
- ✓ கட்டளைக் கலித்துறை, சி.வை.தாமோதரம் பிள்ளை, விழிகள் பதிப்பகம், சென்னை, 2005.

- ✓ *வீரசோழியம், புத்தமித்திரனார், பவானந்தர் கழகம், சென்னை, 1942.*
- ✓ *விருத்தப்பாவியல், வீரபத்திர முதலியார், கழக வெளியீடு, சென்னை, 1984.*
- ✓ *தமிழ் யாப்பியலின் தோற்றமும் வளர்ச்சியும், சோ.ந. கந்தசாமி, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சை, 1989.*
- ✓ *தமிழில் எழுத்தெண்ணிக்கை யாப்பு மரபுகள், தி.அ. இரமேஷ், இளவேனில் பதிப்பகம், நாமக்கல், 2011.*